# பொன்னேரி பேரூராட்சி
## திருவள்ளூர் மாவட்டம்
## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண் 234 /2010 நாள் 26.5.2010

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி பேரூராட்சியில் 2010–2011ம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் கீழேக்குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் மேற்கொள்ள அட்டவனை ஒப்பந்தப்புள்ளிகள் 18.6.2010 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிவரை வரவேற்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி அட்டவனை படிவங்கள் 17.6.2010 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரையில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 18.6.2010 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். இதர விவரங்கள் மற்றும் நிபந்தனைகளை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்.

| வ.எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை இலட்சத்தில் ரூ | செலுத்த வேண்டிய வைப்புத் தொகை | ஒப்பந்தப்புளி படிவ கட்டணம் | பணி முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | நீலி அப்பாதுரை தெரு தண்டபாணி நாடார் தெருவில் தார்ச்சாலை அமைத்தல் | **1000000** | **1689** | **25000** | **60 நாட்கள்** |
| 2 | பேரூராட்சி அலுவலக கூடுதல் கட்டிடம் (முதல் தளம் ) கட்டுதல் | **1100000** | **3378** | **27500** | **180 நாட்கள்** |
| 3 | திருஆயற்பாடியில் உள்ள குளம் மேம்பாடு செய்தல் | **2000000** | **3378** | **50000** | **90 நாட்கள்** |
| 4 | பெரியகாவணம் ஆற்றங்கரை சாலை சிமெண்ட் சாலை அமைத்தல் | **630000** | **1689** | **15750** | **30 நாட்கள்** |
| 5 | அரிஅரன் பஜார் தெருவில் பூ கடை மற்றும் காய்கறி கடைகள் கட்டுதல் | **1000000** | **1689** | **25000** | **180 நாட்கள்** |
| 6 | அரிஅரன் பஜார் தெருவில் மீன் கடை மற்றும் இறைச்சி கடைகள் கட்டுதல் | **1000000** | **1689** | **25000** | **180 நாட்கள்** |
| 7 | பெரியகாவணம் சுடுகாடு மேம்பாடு செய்தல் | **800000** | **1689** | **20000** | **60 நாட்கள்** |
| 8 | குன்னமஞ்சேரி பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | **550000** | **1689** | **13750** | **30 நாட்கள்** |

செயல் அலுவலர்
பொன்னேரி பேரூராட்சி
திருவள்ளூர் மாவட்டம்

இணைப்பு

நிபந்தனைகள்

பெறுநர்

பதிவு பெற்ற தகுதியுள்ள அனைத்து ஒப்பந்ததாரர்கள்
பொன்னேரி பேரூராட்சி , திருவள்ளூர் மாவட்டம்

நகல்

1. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம் அவர்கள் தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது
2. அனைத்து செயல் அலுவலர்கள், திருவள்ளூர் மாவட்டம்
3. திருமிகு. பி. பலராமன் எம். எல். ஏ. பொன்னேரி தொகுதி
4. தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் , பொன்னேரி பேரூராட்சி
5. உதவி செயற் பொறியாளர், திருவள்ளூர் மண்டலம்.
6. உதவி பொறியாளர் , கும்மிடிபூண்டி (தலைமையகம் )
7. அலுவலக விளம்பரப் பலகைக்கு.

# பேரூராட்சி அலுவலகம்

## பொன்னேரி

## வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி பொது நிபந்தனைகள்

1 . ஒப்பந்தப்புள்ளி ஷெட்யூல் ஒப்பந்தப்புள்ளிகளாக ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியே கொடுக்கப்பட வேண்டும். வேலைகளுக்கான ஷெட்யூல் பொன்னேரி பேரூராட்சி அலுவலகத்தில் ஷெட்யூல் ஒன்றுக்கு மதிப்பீடு விகிதாச்சாரப்படி பணமாக செலுத்தி இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 17.6.2010 பிற்பகல் 3.00 மணிக்குள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

டெண்டர் ஷெட்யூல் விகிதாச்சாரம்

1. மதிப்பீடு ரூ 10000 வரை ரூ 169/—
2. மதிப்பீடு ரூ 2 . 00 இலட்சம் வரை ரூ 338/—
3. மதிப்பீடு ரூ 2 . 00 இலட்சம் முதல் ரூ 5.00 இலட்சம் வரை ரூ 844/—
4. மதிப்பீடு ரூ 5 . 00 இலட்சம் முதல் ரூ 10.00 இலட்சம் வரை ரூ 1689/—
5. மதிப்பீடு ரூ10 . 00 இலட்சம் முதல் ரூ 25.00 இலட்சம் வரை ரூ 3378/—

2 . அந்தந்த வேலைகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள டேவணித் தொகையினை 18.6.2010 தேதி பிற்பகல் 3.30 மணிக்குள் ரொக்கமாக பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளப்படவேண்டும்.

3 . பேரூராட்சியில் பதிவு செய்த ஒப்பந்ததாரர்கள் 2010—2011ம் ஆண்டிற்கு பதிவு செய்த மற்றும் புதுப்பித்தவர்களுக்கு மட்டும் ஷெட்யூல் வழங்கப்படும்.

4 . டேவணித்தொகை செலுத்தியதற்கான ரசீது ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பப்படவேண்டும் .

5 . வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி உள்ளடங்கிய அரசு முத்திரையிடப்பட்ட உறையின்மேல் வேலையின் பெயரை தெளிவாக எழுதி செயல் அலுவலர் பொன்னேரி பேரூராட்சி என்ற முகவரிக்கு எழுதப்பட வேண்டும்.

6 . ஒப்பந்தப்புள்ளி அங்கீகரித்த தகவல் கிடைக்கப்பெற்றவுடன் மூன்று தினங்களுக்குள் ரூ 20.00 மதிப்புள்ள முத்திரைத்தாளில் பத்திரம் ஒன்றும் எழுதி கையொப்பம் இட்டு கொடுக்க வேண்டும். அதன் பின்புதான் வேலைகளுக்கான உத்திரவு வழங்கப்படும்.

7 . வேலை செய்ததற்கான உத்திரவு கிடைக்கப்பெற்றவுடன் தொழில் நுட்ப அலுவலரை அனுகி விவரத்தை நன்கு அறிந்து கொண்டு வேலையை ஆரம்பித்து **அந்தந்த வேலைக்கெதிரே குறிப்பிட்டுள்ள காலத்திற்குள்** செய்து முடிக்கப்பட வேண்டும்.

8 . ஒப்பந்தப்புள்ளி ஏற்பதற்கும். நிராகரிப்பதற்கும் எவ்வித காரணம் காட்டாது நிராகரிக்கவோ, தள்ளுபடி செய்யவோ பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களுக்கு முழு உரிமையுண்டு.

9 . வேலையை குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்க தவறினால் அல்லது பொறியாளர்களின் நிபந்தனைகளின்படி செய்ய தவறினால் முன்வைப்புத் தொகை பறிமுதல் செய்வதுடன் , மறு ஒப்பந்தப்புள்ளி கோரி அதனால் ஏற்படும் சகல இழப்புகளுக்கும் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

10 . வேலை அனுமதிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் வேறு யாருக்கும் மறு ஒப்பந்தம் செய்யக்கூடாது.

11 . மதிப்பீட்டில் கண்டுள்ளபடி வேலை திருப்திகரமாகவும் நல்ல முறையில் செய்யவில்லை எனில் வேலைக்குரிய தொகை வழங்கப்பட மாட்டாது.

12 . மதிப்பீடு தொகை 10 % க்கு அல்லது அதற்கு மேலும் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரியவர்கள் 10 % க்கு கூடுதலாக பிணை வைப்புத்தொகை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் செலுத்திய பின்னரே வேலைக்கான உத்திரவு வழங்கப்படும்.

13. முடிக்கப்பட்ட வேலைகள் மதிப்பில் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் வருமானவரி மற்றும் லேபர் இன்சூரன்ஸ் நிதி போன்றவை பிடித்தம் செய்து அரசு கணக்கில் செலுத்தப்படும்.

14 . வேலையின் ஒவ்வொரு நிலைக்கும் அளவுகள் மற்றும் மேல் அளவுகள் எடுக்கப்பட்டு பொறியாளர்களால் முழுமையாக வேலை மதிப்பு கொடுத்த பிறகு தொகை வழங்கப்படும்.

15 . வேலைகள் முடிக்கப்பட்டு பேரூராட்சிகள் உதவி இயக்குநர் , திருவள்ளூர் மண்டலம் , அவர்கள் ஆய்வு செய்த பின்புதான் தொகை வழங்கப்படும்.

16 . கட்டுமான பணிக்கு சிமெண்ட் , இரும்பு கம்பிகள் துறை மூலம் வழங்கப் படமாட்டாது தன் சொந்த செலவில்தான் செய்து முடிக்கப்பட வேண்டும்.

செயல் அலுவலர்
பொன்னேரி பேரூராட்சி
திருவள்ளூர் மாவட்டம்